**செய்தி வெளியீடு எண்: 296** **நாள் : 20.06.2015**

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 16.6.2015 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் விழுப்புரம் மாவட்டம் – கண்டமங்கலத்தில் 1 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 1212 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள், ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள், கிராம ஊராட்சி சேவை மையங்கள், வட்டார ஊராட்சி சேவை மையங்கள், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், பாலங்கள், பேருந்து நிலையங்கள் ஆகியவற்றையும் திறந்து வைத்தார்கள்.

ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுகாதார வசதிகள், அனைத்து பருவ காலங்களுக்கும் ஏற்ற சாலை வசதிகள் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதிலும், ஊரகப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதிலும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் பங்கு மிக இன்றியமையாததாகும். அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை செயல்படுத்துகின்ற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பழுதடைந்த ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், விழுப்புரம் மாவட்டம் – கண்டமங்கலத்தில் 17,000 சதுர அடி கட்டட பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம், கூட்டரங்கம், பயிற்சிக் கூடம் உள்ளிட்ட வசதிகளுடன் 1 கோடியே 73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், காஞ்சிபுரம், அரியலூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருப்பூர் , திருவள்ளூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 62 கோடியே 13 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 35 ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள்;

கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் 7 கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 75 ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள்;

தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் 1095 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 56,830 சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள்;

அரியலூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், சிவகங்கை, திருநெல்வேலி, திருவள்ளூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருவாரூர், திருச்சிராப்பள்ளி, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் 24 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 193 கிராம ஊராட்சி சேவை மையங்கள்;

அரியலூர் மாவட்டம் – தா.பழூர் மற்றும் திருமானூர், நாகப்பட்டினம் மாவட்டம் – மயிலாடுதுறை, திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன்கோவில், திருவள்ளூர் மாவட்டம் – எல்லாபுரம் ஆகிய இடங்களில் 1 கோடியே 33 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வட்டார ஊராட்சி சேவை மையங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – காட்டாங்கொளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வகோட்டை, வேலூர் மாவட்டம் – வாலாஜா மற்றும் கே.வி. குப்பம், அரியலூர் மாவட்டம் – அரியலூர் ஆகிய இடங்களில் 85 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 9 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம் – கல்லல், காளையார்கோயில் மற்றும் திருப்பத்தூர், புதுக்கோட்டை மாவட்டம் – திருமயம், நீலகிரி மாவட்டம் – உதகமண்டலம் ஆகிய இடங்களில் 68 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 சமுதாயக் கூடங்கள்;

கிருஷ்ணகிரி மாவட்டம் – காவேரிப்பட்டினம் மற்றும் வேப்பனஹள்ளி, சேலம் மாவட்டம் – வாழப்பாடி மற்றும் அயோத்தியாபட்டணம், சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை மற்றும் இளையான்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – மணிகண்டம், விழுப்புரம் மாவட்டம் – ரிஷிவந்தியம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் 13 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 பாலங்கள்;

ஈரோடு மாவட்டம் – மொடக்குறிச்சி ஒன்றியத்தில் 46 புதூர், இராமநாதபுரம் மாவட்டம் – இராமநாதபுரம் ஒன்றியத்தில் தேவிபட்டினம், திருப்பூர் மாவட்டம் – பல்லடம் ஒன்றியத்தில் கோடங்கிபாளையம், விருதுநகர் மாவட்டம் – விருதுநகர் ஒன்றியத்தில் கோட்டையூர் ஆகிய இடங்களில் 6 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 பேருந்து நிலையங்கள்;

என மொத்தம் 1214 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள், சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள், வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி சேவை மையங்கள், ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், பாலங்கள் மற்றும் பேருந்து நிலையங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு ஊரகத் தொழில்கள் மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு ப. மோகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைச் செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு கா. பாஸ்கரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : **20.6.2015**